www.tamilarangam.net



# தமிழ் செய்திகள்

hi

Sunday, 17 May 2009

## நடேசன் புலித்தேவன் றமேஷ் கபில் அம்மான் ஆகியோர் உட்பட புலிப்பொறுப்பாளர்கள் பலரின் சடலங்கள் கைப்பற்றப்பட்டு அடையாளம் காணப்பட்டன.

புலிகளின் உயர்மட்ட தலைவர்களான நடேசன் புலித்தேவன் றமேஷ் ஆகியோர் உட்பட புலிப்பொறுப்பாளர்கள் பலரின் சடலங்கள் ராணுவத்தினரால் இன்று காலை கைப்பற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. அரசாங்கம் அறிவித்த பாதுகாப்பு வலயத்தினுள் தேடுதல் நடாத்திய படையினர் கைவிடப்பட்ட நிலையில் பலரின் சடலங்களை மீட்டுள்ளதாக அறிவித்துள்ளனர். இலங்கை அரச பொலிஸ் திணைக்களத்தின் முன்னாள் கொன்ஸ்டபிளும் தற்போதைய புலிகளின் காவல்துறை என அழைக்கப்படும் புலிப்பொலிஸின் தலைவரான நடேசனும் புலிகளின் சமாதான செயலக பணிப்பாளர் என்ற பதவியை வைத்திருந்த புலித்தேவன் மற்றும் புலிகளின் கிழக்குப் பிராந்திய தளபதிகளில் ஒருவரான றமேஷ் ஆகியோரின் சடலங்கள் இன்று அதிகாலை மீட்கப்பட்டிருந்தன. படையினர் தொடர்ந்து நடாத்திய தேடுதலில் புலிகளின் புலனாய்வுத்துறை பிரதிப் பொறுப்பாளர் கபில் அம்மான் புலிகளின் காவல்துறை என அழைக்கப்படும் புலிப்பொலிஸின் பொறுப்பாளரான இளங்கோ மற்றும் சுந்தரம் ஆகியோரின் சடலங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. மேற்படி சடலங்கள் அடையாளம் காணப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கைப்பற்றப்பட்ட மேலும் சில சடலங்கள் அடையாளம் காண்பதற்காகவும் மரபணு பரிசோதனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

Posted by News செய்திகள் at 23:54

0 comments:

Post a Comment


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்